உ

பாலையானந்தசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

சச்சிதானந்தமாலை.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

கடவுள் துணை.

சச்சிதானந்தமாலை.

காப்பு.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

முச்சுடராகியொன்றாய் முடிந்ததோர்சோதிபாதம்
அச்சுதனயனுங்காணா லகண்டமாயளவிலாத
சச்சிதானந்தஞான சதாசிவகுருவைப்பாட
மெய்ச்சுடருதயமான விளக்கொளியுண்மைசெய்வாம்.

கண்ணுக்குண் மணியாய் நின்ற காரணகுருவைப் போற்றி, விண்ணுக்குளொளியைப்பார்த்து மெய்ப்பொருள்விளக்கமாக, மண்ணுக்குளெவர்க்குஞான வழிதனை யுணர்ந்தோர்க்கெல்லாம், ஒண்ணுக்குளொன்றாய்நின்ற வுண்மையை யுரைக்கலுற்றேன்.

இரட்டையாசிரிய விருத்தம்.

முத்தமாய் நின்றபர நாதவொலிகீதமொரு முச்சந்திவீதிநடுவின், மும்மலமகற்றிவெளிநிர்மலசொரூபமாய் முச்சுடரினுச்சிமுடியில், உத்தமாதேசிபரி சித்தமாயஷ்டதிசை யூடாடி வெட்டவெளியில், ஒளியாகி விரிசுடரினுதயகிரி முனையிலே யொருநாலு மிருநாலுடன், நித்தமாய்நின்றபரி பூரணசதா சிவநிலைகொண்ட சோதி

மயமே, நின்மகிமைகண்டுளே தெண்டனிடு தொண்டர்
தம் நினைவுசற்றயராமலே, சத்தமாய் நின்றமணி ரத்ன
வொளிதீபமே தரல்வேண்டு மிதுசமயமே, தற்பரானந்த
சபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே 1

பொற்பிரபையாகிவொருவச்ரமலையுச்சியிற்புன்னை
மலரன்னமலரோ, பூததமலவாசனையி னூற்றமலரூறுதே
ன் புன்னுனியின் மணிபோலவே, நற்பவள மறையிலே
யுற்பனமதாகவே நவில்கின்றனைதகுருவே, நாராயணாய
நமவேதாவினோதநமநந்திசிவசாம்பசிவனே, சொற்பொ
ருளிலாததோர் கற்படிகரூபமாய்த் துய்யமதியாகிவெளி
யில், துரியமுதலாகாய வழிசிகர மணியோசை சொல்
விம்மிநின்றபரமே, தற்புருஷ நிலையிலே விற்புருவநடுவி
லே ஸ்தாபித்தசீர்பாதமே, தற்பரானந்தசபை நிஷ்களா
னந்தசிவ சச்சிதானந்தகுருவே. 2

ஒட்டாதுபாசவினை என்னுளுமின்னார்கள் யோனி
சிறுகேணியளறில், உழல்கின்றபாவமோவெறிகொண்ட
நிர்மூடருடல்கெட்டமுறிபட்டபின், கிட்டாதருந்தபசு
முற்றுதிறனகுதுறை கேடுளவுவெகுதூரமாம், கேசாதி
பாதமல ரீராறுகால்கொண்டு கீழ்மேலு மாராய்ந்துபார்,
எட்டாதுவெட்டவெளி கொட்டாவியிட்டுகழி யிடுகாடு
சுடுபொட்டலாய், யேகமொருகால மழியாத மனஜோதி
யொளி எல்லைநில்லை சொல்ல வெளிதோ, தட்டாது நிஷ்

டையிலு மொட்டாத வட்டமே தரல்வேண்டு மிதுசம யமே, தற்பரானந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதான ந்தகுருவே. 3

முற்றுமோ முத்திபெற வைக்குமோ சித்தமது முப்பாழின் முப்பதியின்மேல், மூதண்டகூட முகடாய்நின்ற நாதமே முனைசுழிபி லணுவாகியே, வத்துவாய் வித்தி லொருசித்தாகிரத்னமணி வந்தசிறுவாசல்வழியே, மடைவாயில்பட்சிபோ னடைபார்த்திரா துநீ மற்றென்ன கற்றறிவையோ, சுத்தமாய் ஸ்தூலவுடல் வைத்தசீர்பாதமது சூக்ஷ்மாதிசூக்ஷ்மநடனம், தொண்டரிரு கண்கள்விழி கொண்டழகுகண்டபின் சொல்லேதுபொருளேதுகாண் சற்றுமோகிட்டவில்லை நெற்றிநேரிட்டசுழி தரல்வேண்டு மிதுசமயமே, தற்பரானந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே. 4

முக்கோணவட்டமொரு சிறுவீடுகட்டியதின் முன்னின்றஜோதிவெளியின், முத்திசிவசத்தியாய் மத்யமதியத்திலே முதலெழுத்தூன்றிநடுவே, உட்கோணவளையமாய் நாற்கோணமீதிலே உசுவாசநிசுவாசமாய் ஊமையுயிராகமதி லாமையுருவாகியே யுண்மைகுருவேடுவனுமாய், அக்கோணவீதிமுத லாகாச மென்மூலபாதாரபாதகமலம், ஆணிநடுமேருகிரி யூடுநடுமுடிவிலே யஷ்டாச்சரத்துள்விரிவாய்ச், சட்கோணமுற்றவெளி யப்பாலிரு

ந்தபதி தரல்வேண்டு மிதுசமயமே, தற்பரானந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே. 5

மூலமணிபூரகமனாகதம்விசுத்தியின்மூவிரண்டாறு மனையாய், முச்சந்தி வீதிநக ருச்சம்பளீரென்னு மூடுவாசல் கோழையறல் வேண்டு மனமே, கோடிபலநூலறிவு வேதமுறை பேசினுங் குருபாதம் வெளியாகுமோ, நீலமணியாபரண வாலகுருசுவாமியார் நின்றநிலைகண்டதெவரோ, நேமி சிவகாமி சர்வேசரிரு தாளெனது நேராக நெஞ்சிநடுவே, காலமெனு மாமோக வேலையறவேஞான சாயுச்சியபத மருளுவாய், தற்பரானந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே. 6

சுந்தரசவுந்தர நிறைந்தபரிபூரண சுயம்பப்பிரகாச வெளியில், சுத்தமயபடிகமய நித்தியநவரத்னமாய் தூண்டாத தீபவொளிவாய், மந்திரசடாக்ஷரவி லட்சணமுதற் செயல் வச்சிரமயதற்சொரூபமாய், மகேசுரசதாசிவசிதம்பரதிகம்பர மனோன்மய சிரோன்மணியனே, அந்தணர் புரந்த ரானந்தரிஷி யும்பருமனேக சிவயோக விருளே, யாகம புராணகலை யோகிய தபோதனர்க ளடிதொழுது கதிடையவே, சந்தனசுகந்தரச கந்தமரவிந்தமதி தரல்வேண்டு மிதுசமயமே, தற்பரானந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே. 7

அன்னமயஸ்தூலமாயுண்மையுயிராகமாயநுபோக வநுகரணமாய், அறிவுதரு முபதேச குருநமசிவாயமா யடிமைகுடிகொண்டபரனே, மன்னமலபேதவகைதன்னி லுழலாமலே மருவியிருபாதமருள்வாய், மதுரரசகருணை மல ரொழுகுதிரு கனகசபை வடிவாகி யென்றனுளமே, சொன்னமயமாகவளர்விண்ணினொளிதா னுனசோதிமதி யாதிபதியே,சுக்கிலசுரோணித வகைக்கொருவிதக்கருவி தோன்றுவது நீயாகையால், சன்னமயமாகவரு மின்னி னொளியேயறிவு தரல்வேண்டு மிதுசமயமே, தற்பரான ந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே. 8

அம்பரவிலாசமா யின்பசுகமோகமாயண்டபகிரண் டவெளியாய், அகண்ட நவகண்டமா யெண்டிசையனே கமா யளவாகிநின்றபொருளாய்ப், பம்பரமிதேது சடச ங்களவிசாரநவ பஞ்சவனமஞ்சுதொழிலாய், பழவினையி னுலெனது கடமென விநோதவகை பகருமொரு பரம வணுவே,உம்பரறியாதபதிசெம்பவளவரையிலேயூன்று தலையாருமறியார், ஓம்நமசிவாயசிவ ஞானகுரு தேசிகா யுண்மைகுடி கொண்ட வடிவே, தம்பரமதாகிய சிதம்பர விலாசமேதரல்வேண்டுமிதுசமயமே, தற்பரானந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே. 9

விரிகின்றகருணைமல ருறைகின்றசிவசோதி விட்ட குறை தொட்டதெனவே, விதிவிசிதமிதுவென்ற மிதம

கிதமறியாதவிண்ணின்னொளி கண்ணினளவாய்த், தெரிகி ன்றதொருசிந்தை யறிகின்றதறிவென்று தெரியாதவிழி குருடரே, இன்னயளவு நினைவுசற் றயராமலங்ஙனே தீப வொளிகாணவெளிதோ, எரிகும்பிமலமாயை யரைதங்கி வருபாச மிதுவைந்துபொடியாகவே, இடியேறு தொனி யோசை யடிமூலமுடிநாடி யேகாந்த வெட்டவெளியில், சரியென்று நிலைநின்று பரிகொண்டு பெறுசிந்தை தரல் வேண்டு மிதுசமயமே, தற்பரானந்தசபை நிஷ்களான ந்தசிவ சச்சிதானந்தகுருவே 10

சொக்கரிள மதிவதன மிக்கதிருமுக்கமல சிவகாமி யுடநேசனே, சித்திதருவாயுனது முத்திபுரிவா யுனது சிவஞானகுருதேசிகா, சொக்கமகமேருகிரி யுக்கிரநடுவா கியே தூணுகினின்றநடனம், சோதிமனமாகியொரு நாத வெளிகீதமே தோன்றுவது பாதகமலம், மெய்க்கருணை பெருகிரச வர்க்கமல ரொழுகுதேன் வெய்யசிவ துய்யக னியே, விட்டகுறைபனுபோக மொட்டதிருவெட்டிலே விரிசத்திபுரியக்கர, சக்கர முமீரா றுநிற்கவொருமிக்கவே தரல்வேண்டுமிதுசமயமே, தறபரானந்தசபை நிஷ்களா னந்தசிவ சச்சிதானந்தகுருவே. 11

கொள்ளிக்கு விள்ளாத கூரிருளிலாகாயங் குறையு மோ வெளிமறையுமோ, கூழுண்ட பாண்ட மிதுநாளு ண்டுபோவதோர் கூற்றனுயி ருற்றமனமே, வெள்ளிக்கு

யர்ந்தமதி வெண்ணிலவு தோன்றவே வெளியாகிவழிகாணவும், விபரமிதுதெளியாத கவலைகுடிகொண்டதொரு விஞ்ஞானகாயமதிலே, துள்ளிமுத்திரிகாண கள்ளப்புலன் பொறிகடுண்டகண்டிதமாகவே, தொந்தவினை தந்தவுடல் கட்டுவிட வெட்டவெளி தாக்குநிலை பொக்குமலையைத், தள்ளிச் சிறைக்குடிலை மெள்ளத்திறந்துசெயல் தரல்வேண்டுமிது சமயமே, தற்பரானந்தசபைநிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே. 12

கட்டாதகாளைதெருவிட்டோடிமீளவருகண்டுகொள்ளாதவிதமோ, கவலைமறைவிரிகொம்புசிவலைமாக்காளை வெகுகடினமதுபிடிபடாது, தொட்டாலுமுட்டுமதுகிட்டவரவொட்டாது சுழிபேதமுனைகூர்மையாம், சூக்ஷமிகுகால்கொம்பு பாய்ச்சலது பாயாமல் துவாதசாந்தத்து வெளியில், மட்டாதகிட்டமுறை கட்டுதுறைகிட்டுவது வரிகயிறுபுரியெட்டினலை, வைபாளிபாயாம லுய்யவேவிட்டுவிட வையமேமெய்யுமிதுவே, தட்டாமல்தட்டிவருகாளையதுபாயாமல் தற்காத்துரக்ஷிசமயம், தற்பரானந்த சபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே 13

ஆடல்புரிநடனவிரு பாதபங்கயவேத மவதானசிவ கோணமாம், அருமறையிலெட்டாத திருநடன விஸ்தாரமானதொருபானுமதியே, கூடவொரு திரிகோண வீடுதருநவகோண கோணமிசைதிசைநாலுமே, கோதையபி

ராமியிரு பாதவொலி நாதமே கோடானகோடிநடனம், பாடலனுகீதசபை யோகசிவரேகைவெளி பரமாயசத்தி வடிவே, பாரமகமேருகிரி யூடுவிமேலான பாலணையபாத கமலம், சாடவனுபோகசெய லோகமுதலாகவே தரல் வேண்டுமிதுசமயமே, தற்பரானந்தசபைநிஷ்களானந்த சிவ சச்சிதானந்தகுருவே. 14

திருமருவுசோதியாய்ப் பிரபையொளிவீதியே தெருவிலொருபாதையதிலே, திரிகரணசுத்தியாயமுதகலசத்திலே தேனமுதமுறுசுனைநீர், வருமொருவா காணவே திருகுசுழிகேணியில் வரவுசிறுவாசறெளிவு, மயிர்ப்பாலமீதினி நெருப்பாறுதாவியே வந்தவழிகண்டதெவரோ அருவுருவி லாகாச மிருசரணகீதமே யநேகசிவ சோதி நடனம், அபயவரவுபயசிவ சமயகுருநாதனே யத்துவித முத்தி பெறவே, தருமவுனசுழிமுனையி லணுவளவு கவனமே தரல்வேண்டுமிதுசமயமே, தற்பரானந்தசபைநிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே 15

முத்தரடிபரவுமிருகமலபதமிதுவென் றுமுன்னின்றஞானகுருவே, முனையாகி மூலமொரு தலையாகிவெளியிலே முனையாகி யேகவிரிவாய்ப், பித்தரொருமித்தவிதி சற்றுமடவார்களோ, பெருமையதுசிறுமையதுவே, பேசாதிருந்தசெய லாசானிருந்தபதி பேருருக் காணவெளிதோ, பத்தரடிபணிவிடைக ளெத்தனை யனேகசிவ பரம கயிலாசமலைமேல், பகரவெறிகிரணவொளிவிசிறிமதிபெ

ருகுநதிபதியிலகுசோதியதிலே, சுத்திமதியத்தவளை சுற்றிவரு சித்திவழிதரல்வேண்டு மிதுசமயமே, தற்பரானந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே. 16

உனதுசெயலுனதறிவு வுனதுணர்வுனதுபொருளுண்மையுயிரானபரனே, ஊருனதுபேருனது வேருனது தூறுநதியுய்யும்வேறுண திலையே, எனதுபய மெனதுசட மென்நாளு மென்னுசை யெள்ளளவு தள்ளமுடியா, இப்படியிருந்தடிமை யெந்தவிதம்வந்தவழி யீடேறவந்து முடியும், மனதுமதிமனதுவெடி மனதொன்றிமனதன்றி மாசற்றவாசமலரின் மாறுடிநின்றபரி யீராறு கால்கொண்டு வானேறவிட்ட பரனே, தனதுபதி யிதுவென்று மறிவுதரு சிவசிந்தை தரல்வேண்டுமே, தற்பரானந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே. 17

ஒட்டிலேபட்டசிறு பட்சிபோலாகியே யுழல்கின்ற பேதைமனமே, உள்ளமேகோயிலொரு வள்ளலேதாணுவா யுன்னைவிட்டகலாமலே நெட்டிலே திரிகின்ற பட்டமிடுபுரவியோ னீங்காதகாலனவனை, நீயதிசமுற்றுமலோரறிவுகிட்டாம நீயேக்கிநீமடிகிறாய், எட்டிலே ரண்டிலே மட்டிலேகட்டியேயீரெழுத்தோரெழுத்தால், இசையாத மந்திரமு மசையா திருத்தியே யெல்லைபெற வல்லபெரியோர், தட்டிலேநிஷ்டமுறை யிஷ்டமாய் நின்றபடி தரல்வேண்டு மிதுசமயமே, தற்பரானந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே. 18

விடையேறுசடையாளரடையாளமுடிசூடவேண்டுமெதுதாருமெனவே, விண்ணப்பமொன்றுளது கண்ணப்பனுருடைய மேலேயூர் போதுமெனவே, இடையூறுவாராது குடியேற வொருவீட திப்போது தப்பாமலே, யினியதொருவாசமலர் மகிமைதருநாசிமூனே யிருவழியுமொருசுழியிலே, கடைகோடிமனேயிலே யிடைவிடாரகசியங்காட்டொணுதந்தரங்கம், கனககபைகொலுமேடையனவரதகலியாணங் கண்கொளநந்தநடனம், தடைபடாமகுடமுடி வடிவானகுருபதந்தரல்வேண்டுமிதுசமயமே, தற்பரானந்த சபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்த குருவே. 19

பரமண்டலங்கனகசபைமண்டலம்படிக பதிமண்டலம்தவமதாய், பரிவிண்டலம்புகுதமது குண்டலங்குழைகள்பணி கங்கணங்கிரணமே, உரமண்டலம்பெரிய தரமண்டலந்தெரிய வுமைபங்கனன்புபுரிய, ஒளிமண்டலந்தரிசு வெளிமண்டலம் பெரிசு யுகமண்டலஞ் சிரசதாய்ச், சிரமண்டலங்களவை குடிகொண்டிலங்குசடைசிவசம்புசாம்பசிவனே, ம[illegible]கமண்டலம்புகழ[illegible] விசம்ப்ரமங்களொடு திருவம்பலம்பரவவே, சரமண்டலங்களொடு நடனம்புரிந்தகழல் தரல்வேண்டு மிதுசமயமே, தற்பரானந்த சபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தசிவமே. 20

நந்திநாதப்பரா விந்தபாதத்துகளை நம்பினே னிப்பொழுதுமோ, நண்பனருட்கருணை பொங்கியே மெய்க்கமல நன்றுபாலிக்கவருமே, இந்திராதித்தருடனந்தமூலப்பொருளை யின்பசாரச மதுரமாய், எந்தவேளைக்கறிவு வெந்தவேளைக்குதவியென்று போதித்தருளுவாய், திந்திதாதிகுசந்த தாளத்தி னேடுமே செஞ்சரண நிர்த்தநடனம், செம்பொன்மேருக்கிரியினின்பமா முத்திதருசிந்தை மயமற்ற குருவே, சந்திராதித்தரிரு விந்துநாதத்தொனியில் தன்ரூபரதற்பிரமமே, தற்பரானந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே. 21

வானுகியேதமொரு காலாகிலோகமாய் வகைநாலு வேதவிரிவாய், வடிவுமலருபமாய் நிலைசராசரமுமாய்வந்தவதரித்தபொருளே, யானுகிநீயுமொருதாயாகி வாசமலரணுவாகியெனை நீயுமே, அன்றெழுதிவிட்டநீ யென்றறியமுற்றுமோ வபிஷேகமுடிமீதிலே, தேனுகிமேருகிரிபாலானபாதமது தெரிசிக்க வெதிர்நிற்குமே, சித்தகயிலாசகொலு நாதவொயிலானதொரு சிவசிவா தீபவொளியே, தானுகி மூலமுத லாதார பாதமே தரல்வேண்டுமிதுசமயமே, தற்பராணந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே. 22

நீரூபமாகியொரு காரணகடாட்சமாய்நெறிமுறைமைதவறுமலே, நினைவுதருமுபதேசவறிவுசிவ குருவாக நேசமறவாத பொருளே, மாரூபரூபமென ரேகைவெளியொளியிலே வாசுகிபணுமகுடம்மேல் வரவேண்டு மிருபதம் பெறவேண்டு மடியேனு மகமேரு வடகிரியையே, கிருபாவிசாலமலரோ நமசிவாயமே தேவாரதிருவாசகாசிந்தைகுடி கொண்டருளு மென்றனிட சுவாமியே சிவஞானபரிபாலனே, சாரூபசாயுச்சியபாதாரவிந்தமே தரல்வேண்டு மிதுசமயமே, தற்பரானந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே. 23

கணப்போது பிரியாதகுணப்பூதவகையாற்கலைப்பாலுமலைப்பாகவே, கருவிபலகரணாதி பிறவுபொறி புலனைசைகைம்மீறிமெய்மாறினல், அணுப்பாதைகடப்போது விருப்பானதிருப்பரத மனுப்போலவரப்போகுதோ, அமுக்கானமலக்காடு செடித்தூறுவிலக்காத வடிப்பாடுசிறுப்பாதைகாண், துணைப்போக முடியா திளைப்பாற நிலையாது சொலக்கேளுமனக்காமியே, துடுக்கானதலைக்காவநெருப்பாறுமயிர்ப்பாலஞ் சுறுக்கானபெறுக்காறுகாண், க்ஷணப்போது தனைத்தேடு கருப்பூரதீபமே தரல்வேண்டுமிதுசமயமே, தற்பரானந்த சபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே. 24

முனையாதுசுழியாது தனையேறவழியேது முடிகூடு துறையேதுகாண், முதுஞானிகனியூறல் கதிரோனுமறியாதமுனைமீதிலணுவாகியே, தினையானதொருரேணுவரலாறுமினையானசிவரூபவிபரீதமே, தெரியாதிதெவராலுமரிதானவெளிமாயை திருமூலர்தாமுமறியார் வினையூறுமலநாறு புழுமான வினைகூடி விளையாடி யலைமோதியே, விழுகாயமுதுமாய மறியாமலுறவாடி விதிமோசமதிமாயையால், தலையால் வறியாதவென்னை நீயுமறவாது தரல்வேண்டுமிதுசமயமே, தற்பரானந்தசபைநிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே. 25

சிவகிருபைசிவமகிமையறிவுதனையறியாத செனனமதுசனையறுது, திருநடன பரிபால நடனசபை யொயிலான திரிநயனமழுமானுமாய், தவநினைவுபலவானமனதுதனையறமோதி நடுவணையிளடுயனையிலே, நளினமலரணைபெருகு சிறுகுமிழிதுளியருளி நாயேனையாளநினைவாய், இவனொருவ னவனன்று தனையறியதானில்லை யேகமுதலாகாயமே, இருமதியு மொருமதியில் வருமளவுதவறுமவிரவுபகலாகமதிலே, தவமகிமை நினைவான கதியடையவிருபதந்தரல்வேண்டுமிதுசமயமே, தற்பரானந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே, 26

அயனொருவனரியொருவ னரனொருவனுகவிம்மூவரையுமன்பாகவே, அருளுமொருகுருசுவாமி யிவிடமல

வெகுதூரமதுவறிய வெகுவருஷமாய், வியனுலகு தெரி யாத ரகசியமிதாரறிவர் விரிகமலசுருதிமுடிவு, விளைவுப யிர்முனைபுகுத விடமுமொரு துகளளவுமிடைவிடாதே கவெளியில், பயனுதவுதயதான பதியருளு மினிதான பரமகுருநாதசிவனே, பதியணுகு பசுபாச வினையகலவி டல்வேண்டும்படி கமயதவளவடிவே, சயனமொரு மல ரணையி லொலிநடனமணியோசை தரல்வேண்டு மிதுச மயமே, தற்பரானந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதா னந்தகுருவே. 27

பகலிரவுமதியிரவி வருதிசைக ளுலகுவெளி பரம வணு பனியளவுமாய்ப், பகருமொரு விவரமிஃதெவருமறியாதசெயல் பவுரிகயிலாசமெனவே, உகமுடிவு திணைய ளவு தனையறிய முனைபெரிய துறந்திவழி யறுதிநிலைபார், உதயமிருபதசரண கிரணமணி கலகலென வுரகபட நடு முடிவிலே, அதிகமகிழ்வரு பரமகுரு நமசிவாயமே யத் துவிதமுத்திபுரிவாய், அழகுதிருமணிமகுட முடிசடை யுமறிமழுவுபரவரவும்பயமுடனே, சகலகலையமிர்தகுண விகிதநடை ரிஷபவிடை தரல்வேண்டுமிதுசமயமே, தற் பரானந்தசபை நிஷ்களானந்தசிவசச்சிதானந்தகுருவே.

நாலுமறையறியாத யோகபரவெளியிலே ராகமனு ராகதொனியாய், நாசிநுனி நடுவாகி வாசியிடை கடை யாகி நாதகயிலாசவெளியில், காலுதலை யதுவாகி யேறு

துறைமுறைகூறு காசிநரூசிதுருவம், கதலிவனமிடுகாடு படுகுழிகள்சிறுபாதை கடுவெளியிலரவுநெளிவு, போலு மதுவிருளான மூடுதிறைபரவிசுபோருமதுகாமவெகுளி பூதபொறிபுலனுசை யேதுமிலே நிலேயாது புருவநடுமதி யடையவே, சாலுமிதுபாலுநெய்போலுமதுதெளியவே தரல்வேண்டு மிதுசமயமே. தற்பரானந்தசபை நிஷ்க ளானந்தசிவ சச்சிதானந்தகுருவே. 29

பாமுமிதுபொருளுமிது வழியுமிதுதெளிவுமிதுப திறுலு லோகமிதுவே, பாசவினையாலெனது லோகமே மோசமிது பாழுறவுபாழானதே, உரமுமிருகாலோசை பிரவுபகலன்றியே யுட்சராசரமுமதிலே. ஒளிவெளியி லொளியிலாகியுபநிடதநடனமா யூழிவதியாழியெனவே சிரமகுடமுடிவிலே கனகமணியிசையிலே சிவஞானதீப மதுபார், திருமருவுசிவசோதி மதிபெருகுகதிவீடு தெரி சனேகளாகிமுடியும், சரமுமதுபதிசேவை சகலகலேயனு ராக சாயுச்யபத மருள்வாய், தற்பரானந்தசபை நிஷ்க ளானந்தசிவ சச்சிதானந்தகுருவே. 30

சச்சிதானந்தமென்னுந் தன்மையைமகிழ்ந்துகேட் போர், உச்சிமேற்பார்வையாகி யுள்வெளி திறந்து மும் பாழ், வச்சிரவொளியுந் தாண்டி மகிழ்ந்தொரு வாசல்க ண்டு, நிச்சயநிஷ்களத்தே நிராமயச்சோதிசேர்வார்.

சச்சிதானந்தமாலே-முற்றிற்று.